**7. அங்கம் வெட்டிய கதை**

மதுரை மாநகரிற் குலோத்துங்க பாண்டியன் அர சாட்சி செய்துகொண்டிருந்தான். அப்பொழுது வாள் வித்தையில் வல்லவன் ஒருவன்



மதுரையை அடைந்து வாள் வித்தையைப் பலருக்குங் கற்பித்து அதனால் வரும் பொருளைக்கொண்டு வாழ்க்கை நடத்திக்கொண்டிருந் தான். அப்பொழுது சித்தன் என்னும் பெயருடையவன் ஒருவன் வாள்வித்தையை நன்கு கற்றுத் தேறினான். தன் னுடைய ஆசிரியனுக்கு மாறாகத் தானும் ஒரு பயிற்சிக் கூடம் ஏற்படுத்தித் தானும் அத்தொழிலைத் தொடங்கி னான். முதியவனிடங் கற்றுக் கொண்டிருந்தவர்களைத் தன்னிடம் வருமாறு கலைத்து அதனால் தன்னுடைய வருவாயைப் பெருக்கிக்கொண்டான். தன்னுடைய ஆசிரியன் மனைவியைக் கெடுக்கப் பல முறை முயன்றான். ஒருநாள் அவளுடைய கையைப் பிடித்து இழுத்தான். அவள் சோமசுந்தரக் கடவுளை நோக்கி முறையிட்டுக் கொண்டாள். சோமசுந்தரக் கடவுள் சித்தனுடைய ஆசிரியனைப் போல் வடிவங்கொண்டு சித்தனிடம் சென்றார். 'முதியவ னாகிய நானும் இளங்காளையாகிய நீயும் வாட் போர் செய்து நம்முடைய ஆற்றலை அளந்தறிவோம்' என்றார். மறு நாள் நகர்ப் புறத்திலே இருவருக்கும் வாட்போர் நடந்தது. முதியவனாக வந்த சோமசுந்தரக் கடவுள் சித்தனோடு இருபது நாழிகை வரையிற் போர் செய்தார். பிற்கு அவ னுடைய நாக்கு, கை முதலியவைகளையும் பிறகு தலையை யும் அறுத்துத் தள்ளிவிட்டு மறைந்தருளினார். "இருவருக்குங் காண்பரிய ஈசர்மது ரேசனார் விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனர்காண் அம்மானை (மதுரைக் கலம்பகம்)

[பழி தீர்த்தல்]